Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 29.06.2024 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

நாள் 29.06.2024 சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

புனித அமர்நாத் யாத்திரை தொடங்குவதை முன்னிட்டு அனைத்து யாத்ரீகர்களுக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

லடாக்கில் பாதுகாப்பு படை வீரர்கள் ஆற்றைக் கடக்க முயன்ற போது நேரிட்ட விபத்தில் 5 வீரர்கள் உயிரிழந்தது குறித்து, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இரங்கல் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு நாளை நடைபெறவுள்ளது.

மன் கீ பாத் (8)

பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 30ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுடன் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்கிறார். பிரதமரின் இந்த 111ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி, அன்றைய தினம் காலை 11 மணிக்கு, அனைத்து ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷன் அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3ஆம் முறையாக பிரதமர் பதவி ஏற்ற பின்னர் வழங்கும் முதலாவது மன்-கீ-பாத் நிகழ்ச்சியாக இந்நிகழ்ச்சி அமைவதும் குறிப்பிடத்தக்கது.

அமர்நாத் (13)

புனித அமர்நாத் யாத்திரை தொடங்குவதை முன்னிட்டு அனைத்து யாத்ரீகர்களுக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள அமர்நாத் குகைக் கோவிலுக்கு, பஹல்காம் மற்றும் பல்டால் பாதை வழியான வருடாந்திர யாத்திரை, இன்று தொடங்குகிறது. 4 ஆயிரத்து 603 பக்தர்கள் கொண்ட முதல் குழுவினர் இன்று பனி லிங்க தரிசனம் செய்கின்ற

னர்.

Baba Barfani-யின் தரிசனம் மற்றும் வழிபாட்டுடன் தொடர்புடைய இந்த 52 நாட்கள் நடைபெறும் இந்த யாத்திரை, பக்தர்களுக்கு மகத்தான ஆற்றலை அளிக்கிறது என்று பிரதமர் சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். யாத்ரீகர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ள, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, இந்திய கலாச்சாராத்தின் பாரம்பரியம் மற்றும் ஆன்மிக அடையாளமாகவும், இந்த யாத்திரை திகழ்கிறது என்று கூறியுள்ளார். யாத்ரீகர்களின் பாதுகாப்பான, சுமூகமான மற்றும் இனிமையான பயணத்திற்கு மத்திய அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

### அமித் ஷா (15)

பேரிடர் மேலாண்மையில் நாடு சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா கூறியுள்ளார். மலையேற்ற நிகழ்ச்சியை இன்று துவக்கி வைத்துப் பேசிய திரு. அமித்ஷா, இந்தியாவில் மட்டுமல்லாது உலகில் எங்கெல்லாம் பேரிடர் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் நாட்டு மக்களும், உலக மக்களும் தேசிய பேரிடர் மீட்புப் படையை எதிர்பார்க்கின்றனர் என்று கூறினார். தேசிய பேரிடர் நிவாரண

நிதியை, வீரர்களின் நலனுக்கும், பேரிடர் நிவாரண மேலாண்மையை நவீனப்படுத்தவும், மத்திய அரசு சிறப்பாக பயன்படுத்தி வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். மலையேறும் பயணத்தின் வெற்றிக்காக, பேரிடர் மேலாண்மைக் குழுவைப் பாராட்டிய அவர், இது போன்ற கடினமான பணிகள், தனிநபர் மற்றும் படையின் செயல் திறனை பெரிதும் அதிகரிக்கின்றன என்றும் கூறினார். இந்நிகழ்ச்சியில் மத்திய உள்துறைச் செயலாளர் திரு. அஜய் குமார் பல்லா, தேசிய பேரிடர் மீட்பு படையின் தலைமை இயக்குநர் திரு. பியூஷ் ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ராஜ்நாத் (12)**

லடாக்கில் பீரங்கியுடன் பாதுகாப்பு படை வீரர்கள் ஆற்றைக் கடக்க முயன்ற போது நேரிட்ட விபத்தில், 5 பேர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இரங்கல் தெரிவித்துள்ளார். தேசத்திற்கு துணிச்சலான வீரர்களின் முன்மாதிரியான சேவையை நாட்டு மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்றும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாகவும், இந்த துயரமான நேரத்தில் தேசம் அவர்களுடன் உறுதியாக நிற்கும் என்றும் அவர் தமது சமூக ஊடகப்பதிவில்

குறிப்பிட்டுள்ளார். நேற்று இரவு ஷியோக் ஆற்றை கடக்கும் போது திடீரென ஆற்றில், நீர்மட்டம் அதிகரித்ததால், T-72 டாங்கி மூழ்கியபோது இந்த விபத்து நிகழ்ந்ததாக லே-வில் உள்ள பாதுகாப்பு அதிகாரி வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**கஜேந்திரசிங் ஷெகாவத் (14)**

யுக யுகீன் பாரத் அருங்காட்சியம், நாட்டின் பயணத்தை வெளிப்படுத்தும் என்று மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற இந்த அருங்காட்சியகம் குறித்து இந்தோ-பிரான்ஸ் கூட்டுத்திறன் மேம்பாட்டு பயிலரங்கின் கடைசி நாளில் கலந்து கொண்ட அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் கனவுத் திட்டம் இது என்று குறிப்பிட்டார். மேலும், இது மக்களின், மக்களால், மக்களுக்கான அருங்காட்சியகமாக இருக்கும் என்று திரு. ஷெகாவத் தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேசிய கலாச்சாரத்துறை செயலாளர் திரு. கோவிந்த் மோகன், இந்த அருங்காட்சியகம் 1 லட்சத்து, 54 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் அமையவுள்ளது என்றும், இந்தியாவின் வளமான கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் திட்டமிடப்-

பட்டுள்ளதாகவும், வரும் தலைமுறையினருக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக அமையும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**புள்ளியல் தினம் (18)**

18ஆவது புள்ளியியல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. 2007ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் புள்ளியியல் வல்லுநர்களின் விதிவிலக்கான பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்கும், பாராட்டுவதற்கும் தலைசிறந்த புள்ளி விவர நிபுணர் பேராசிரியர் பிரசந்தா சந்திர மஹாலானோபிஸ் பிறந்த நாளை கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் ஜூன் 29ஆம் தேதி அன்று புள்ளியியல் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான கருப்பொருள் use of data for decision making என்பதாகும். புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 16ஆவது நிதிக்குழுவின் தலைவர் டாக்டர் Arvind Panagariya, டிஜிட்டல் மற்றும் பிற வழிகள் மூலம் தகவல்களுக்கான பெரும் தேவையை சமாளிக்க, துல்லியமான புள்ளி விவரங்களை உருவாக்குவதே தற்போதைய காலத்தின் சவால் என்று கூறினார். புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் செயலாளர் திரு சௌரப் கார்க் கூறுகையில், இந்த துறையில் எந்த வகையில் முறையான மேம்பாடு செய்ய முடியும் என்பதை அமைச்சகம் கவனித்து வருவதாகவும், தகவல் தொழில்நுட்பக்

கருவிகளைப் பயன்படுத்துவது மற்றும் பேனா, காகித கணக்கெடுப்புகளில் இருந்து விலகி, கணினி பயன்பாட்டிற்கு மாறுவது குறித்து அமைச்சகம் ஆராய்ந்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

ஜெய்சங்கர் (6)

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டிற்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலைமையில் இந்திய தூதுக் குழு கலந்துகொள்ள உள்ளது. கஜகஸ்தானில் உள்ள ஹஸ்தானாவில் ஜூலை 3 மற்றும் 4ஆம் தேதி இம்மாநாடு நடைபெறவுள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு.ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

காவல்துறை புதுச்சேரி (16)

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு 12 மையங்களில், நாளை காலை 10.00 மணி முதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது. தேர்வு எழுதுபவர்கள் சம்பந்தப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும், அவர்களது ஆதார், வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட ஏதேனும் ஒன்றின் அசல் ஆவணத்தைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும் என்றும் தேர்வுக்

கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பங்கஜ் குமார் செய்திக்குறிப்பு வெளியிட்டள்ளார். தேர்வர்கள் காலை 9.30 மணிக்கு மேல் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும், விரல் ரேகைப் பதிவு செய்யப்பட உள்ளதால், தேர்வு மையத்திற்கு குறித்த நேரத்திற்கு முன்பாக வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற உடல் தகுதி தேர்வில் வெற்றி பெற்ற, 3 ஆயிரத்து 34 ஆண் போட்டியாளர்களும், ஆயிரத்து 195 பெண் போட்டியாளர்களும், எழுத்து தேர்வில் பங்கேற்க உள்ளனர். தேர்வுக்கூட நுழைவுச் சீட்டை, புதுச்சேரி அரசின் recruitment இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அறிவித்துள்ளது.

## தொழிற்பயிற்சி புதுச்சேரி (14)

புதுச்சேரி, அரசு தொழிலாளர் துறை பயிற்சி இயக்குநரகம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு ஐடிஐ மூலம் தொழிற்பயிற்சி நடத்தி வருகிறது. புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும ஏனாம் பகுதிகளில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒரு வருடம், மற்றும் இரண்டு வருட பயிற்சி பிரிவுகளில் சேர்ந்து படிக்க ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க நாளை கடைசி நாள் என்று மேட்டுப்பாளையம் அரசு

ஆண்கள் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு. அழகானந்தம் செய்திக்குறிப்பு வெளியிட்டுள்ளார். மேலும் விபரங்களுக்கு மாணவ, மாணவிகள் www.centacpuducherry.in அல்லது labour.py.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. Fitter, electrician, welder, technician உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் இதில் வழங்கப்படுகின்றன என்றும், இந்த ஓராண்டு பயிற்சியின் போது ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டாலின் (10)

தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்க வகை செய்யும் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டதிருத்த மசோதா, சட்டப்பேரவையில் இன்று நிறைவேறியது. இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர், திரு. மு.க. ஸ்டாலின், கள்ளச்சாராயம் காய்ச்சுவது, விற்பது உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபவோருக்கு ஆயுள் தண்டனை, 10 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதோடு சம்பந்தப்பட்டவரின் அசையா சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் கூறினார். மாநிலத்தில் போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டு வருவதாகவும், கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அரசு எதையும் மறைக்கவில்லை என்றும் முதலமைச்சர் கூறினார்.

தமிழ்நாடு சட்டப்பேரவை (16)

கடந்த 20ஆம் தேதி தொடங்கிய தமிழக சட்டப்பேரவையின் கூட்டத்தொடர் காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெற்ற நிலையில் மொத்தம் 16 அமர்வுகளில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், இன்று சட்டப்பேரவையில், காவல், தீயணைப்பு மீட்பு பணிகள் துறை தொடர்பான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில், தமிழ்நாட்டில் கொளத்தூர், கேளம்பாக்கம், செங்குன்றம் ஆகிய இடங்களில் புதிய மகளிர் காவல் நிலையம் அமைக்கப்படும் என்றும், கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் 229 காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் என்றும் கூறினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது பேசிய மாநில நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, வட சென்னை வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு தொள்ளாயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான பணிகள் செயல்படுத்தப்பட்டு

வருவதாகவும் கூறினார். நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரில் பேரவைத் தலைவர் மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்ததை அடுத்து, இந்தக் கூட்டத் தொடர் நிறைவடைந்தது.

## நீட் நுழைவுத் தேர்வுகள் (10)

ரத்து செய்யப்பட்ட மற்றும் தள்ளி வைக்கப்பட்ட UGC-NET தேர்வுக்கான புதிய தேதிகளை தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. பல்கலைக்கழக மானியக் குழுவால் நடத்தப்படும் தேசிய தகுதித் தேர்வு ஆகஸ்ட் மாதம் 21ஆம் தேதி முதல் செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி வரை நடைபெறும் என்றும் CSIR-UGC-NET ஒருங்கிணைந்த தேர்வு ஜூலை மாதம் 25ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், 4 ஆண்டுகள் ஒருங்கிணைந்த ஆசிரியர் கல்வித்திட்ட சேர்க்கைக்கான தேசிய பொது நுழைவுத் தேர்வு ஜூலை 10ஆம் தேதி நடைபெறும் என்றும் தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேசிய தேர்வு முகமையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக மாணவர்கள், பெற்றோர் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் innovateindia.my.gov.in என்ற இணையதள முகவரில் தெரிவிக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**உலகக் கோப்பை (7)**

உலகக் கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் தென்னாப்பிரிக்காவும் இன்று களம் காணுகின்றன. பிரிட்ஜ் டவுனில் நடைபெறும் இந்தப் போட்டி இன்று இரவு 8.00 மணிக்குத் தொடங்குகிறது. இந்த டி-20 கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் இதுவரை 26 ஆட்டங்களில் மோதியுள்ள நிலையில் 14 போட்டிகளில் இந்தியாவும், 11 போட்டிகளில் தென்னாப்பிரிக்காவும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி ட்ராவில் முடிவடைந்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு ஆகாஷ்வாணியின் மன்-கீ-பாத் நிகழ்ச்சி மூலம், தமது எண்ணங்களை மக்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

புனித அமர்நாத் யாத்திரை தொடங்குவதை முன்னிட்டு அனைத்து யாத்ரீகர்களுக்கும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

லடாக்கில் பாதுகாப்பு படை வீரர்கள் ஆற்றைக் கடக்க முயன்ற போது நேரிட்ட விபத்தில் 5 வீரர்கள் உயிரிழந்தது குறித்து, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இரங்கல் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில், ஊர்க்காவல் படை ஆள் சேர்ப்பு பணிகளுக்கான எழுத்துத் தேர்வு நாளை நடைபெறவுள்ளது

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. AV/PS/VM